


நகர் ஊரமைப்புத்துறை (DTCP)

திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

பொங்குபாளையம் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், பொங்குபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்கள்: 175/2B, 179/3C5- ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண்: Z8YOW7HU நாள்: 22.02.2025

அளவுகோல் : 1 : 300

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பளவு : 1.84 ஏக்கர் (அ) 7436.00 ச.மீ (பட்டாவின் படி)

கோரிய மனைகள் : 12

ஒதுக்கிய மனைகள் : 12

மனைப்பிரிவு எல்லை

நிலையிலுள்ள சாலை/அணுகுசாலை

மனைப்பிரிவு சாலை

பொது ஒதுக்கீடுகள்:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

I. மனைப்பிரிவின் சாலை பரப்பு : 1578.07 ச.மீ

II. ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)X10%
= (7436.00 - 1578.07)X10%
= 585.79 ச.மீ

வழிகாட்டு மதிப்பு தொகை (TNCDRBR-2019 விதி 47(6) -ன் படி பூங்கா (OSR 10%) பரப்பு 585.79 ச.மீ -க்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பீடு தொகை ரூ.1,75,737.00-யினை உரிய அரசு கணக்குத் தலைப்பில் நாள்:21.03.2025 அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம்

(A). உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட
வேண்டிய பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) X 0.5% = (7436.00 -1578.07) X 0.5%
= 29.29 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 77.69 ச.மீ (1.32%)

(B). TANGEDCO-க்கு ஒதுக்கப்பட
வேண்டிய பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) X 0.5% = (7436.00 - 1578.07) X 0.5%
= 29.29 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 73.51 ச.மீ (1.25%)

மூலை முடக்கு :-

12.0மீ வரை அகல வரையிலான சாலைகளுக்கு 1.5மீ X 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

கட்டிட வரம்பு :-

9.0 மீ அகல வரையிலான சாலைகளுக்கு 1.50மீ -ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்

1. அரசாணை எண்:18 ந.நி(ம)கு.வ.துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 ந.நி(ம)கு.வ.துறை நாள்.31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள், உள்ளாட்சி மற்றும் TANGEDCO-விற்கான பொது ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. அரசாணை எண். 181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020-மற்றும் அரசாணை எண். 141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022- ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதி மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம் மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியபட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைகுண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சியால் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO: 51/2025

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்

Signature valid Signature valid